# மாபெரும் சக்தி





TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity
www.RTIwatch.lk
Sarvodaya

# உங்களிற்கு தெரியுமா?

இலங்கை பிரஜையான உங்களிற்கு பொது/அரச நிறுவனங்களிடமுள்ள தகவல் ஒன்றினைப் பெறுவதற்கான அடிப்படை உரிமை உண்டு.

அதாவது, உங்கள் பொன்னான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட உங்கள் பிரதிகளின் செயற்பாடுகள் மற்றும் முடிவுகள் தொடர்பாக அனைத்து பொது அலுவலர்களிடமிருந்தும் அறிந்து கொள்வதற்கு உங்களுக்கு உரிமையுண்டு.

## மேலதிகமாக விளங்கப்படுத்துவதாயின்

- தகவலானது நீர், உணவு, காற்று போன்று இன்றியமையாததாகும்.

- பொது நிதியினைப் பயன்படுத்தி மேற் கொள்ளப் படும் அரச அலுவலர்களின் முடிவுகளில் இருந்தே தகவல்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே தகவல்களைப் பெறும் உரிமையானது உங்களிற்கு உண்டு.

- தகவலானது மக்களின் நலனிற்காக பாதுகாக்கப்பட வேண்டும். ஆகவே அரச அலுவலர்கள் உங்களிடமிருந்து தகவல்களை மறைத்தல் கூடாது.

# தகவல் எனப்படுவது யாது?

“அறிவே சக்தியாகும்” அந்த 'அறிவினை' நாம் தகவல்களின் மூலமே பெற முடியும். ஆகவே தகவல்களானது உங்களிற்கு முக்கியமான கருவிகளாகும். மற்றும் உங்கள் அன்றாட நடவடிக்கைகளிற்கு அத்தியாவசியமாகும்.

இந்த தகவல்களை நாம் பல வடிவங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.




## பொது நிறுவனங்கள் / பகிரங்க அதிகார சபைகள் எனப்படுவது யாவை?

- ❖ அமைச்சுக்கள்
- ❖ அரச திணைக்களங்கள்
- ❖ உள்ளூர் அதிகார சபைகள்
- ❖ பொலிஸ்
- ❖ நீதிமன்றங்களும் நியாய சபைகளும்
- ❖ எழுத்து மூலமான சட்டத்தினப்படையில் நிறுவப்பட்ட அல்லது பொது நிதியில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள்
- ❖ அரச நிதி பெறும் உயர் கல்வி நிறுவனங்கள்

# தகவலிற்கான உரிமை ஏன் உங்களிற்கு அவசியமாகும்?

தகவல்களை பெறுதலானது உங்களது ஏனைய அடிப்படை உரிமைகளை பாதுகாக்க அவசியமானதொன்றாகும்.



## எதனை உங்களால் கேட்க முடியும்?

ஏன் ஒரு சில மக்கள் மாத்திரமே நன்மையைப் பெறுகின்றார்கள்?



ஒரு சிலரை ஒரு வேலைக்கு தெரிவு செய்வதற்கு கையாளப்பட்ட அடிப்படை நியமங்கள் யாவை?



நேர்முகப் பரீட்சையில் நீங்கள் பெற்ற புள்ளிகள் எவ்வளவு?



உங்கள் குழந்தை பாடசாலைக்கு சேர்த்துக் கொள்ளப்படாமைக்கு காரணம் யாது?



மற்றும் உங்கள் நாளாந்த செயற்பாட்டிற்கு தேவையான தகவல்கள் அனைத்தும் தகவலிற்கான உரிமை மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

## தகவலிற்கான உரிமை மூலமான நன்மைகள்

- நாளாந்த நடவடிக்கைகளில் ஏற்படும் சிக்கல்களை தீர்ப்பதற்கு
- நாட்டின் ஊழலை குறைக்க அல்லது ஒழிக்க
- ஊடக சுதந்திரம் மற்றும் பத்திரிகை சுதந்திரத்தை உறுதிசெய்ய
- நாட்டின் செலவுகளை குறைக்க
- நாட்டின் உயர்கொள்கைகளை கேள்விகேட்க
- நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலிற்காக

- ❖ உங்கள் தகவலிற்கான உரிமையை தெரிந்துகொள்வதற்கும் அதை பாதுகாப்பதற்கும்
- ❖ பொருளாதார வளர்ச்சிக்காக
- ❖ சிறந்த பொதுச் சேவையைப் பெறுவதற்காக

உலகம் முழுவதிலும் பல நாடுகள் தகவலுக்கான உரிமையை ஏற்றுக்கொண்டுள்ளன.

உதாரணம்: அவுஸ்திரேலியா, சீனா, தென்னாபிரிக்கா, தாய்லாந்து, இத்தாலி, இந்தியா

கீழ்வரும் இரண்டு உதாரணங்களும்

இந்தியர்கள் தகவலுக்காக உரிமையை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதை காட்டுகின்றது.

நண்ணு என்பவர் சேரிப்பகுதியில் வசிக்கும் ஒரு தினக்கூலியாவார். அவர் தனது ரேஷன் அட்டையினை தொலைத்துவிட்டார். அவர் புதிய அட்டையைப் பெற சம்பந்தப்பட்ட திணைக்களத்தில் விண்ணப்பித்தார். அவர் அதனை சாதாரணமாக 10 நாட்களில் பெறக்கூடியதாக இருப்பினும் 3 மாதங்கள் கழிந்தும் அவரால் குறித்த அட்டையினை பெறமுடியவில்லை. ஆகவே சிவில் சமூக அமைப்புகளின் உதவியோடு நண்ணு தனது தகவலிற்கான உரிமையின் கீழ் குறித்த அட்டை தொடர்பான தகவலிற்காக விண்ணப்பித்தார். அவர் தான் விண்ணப்பித்ததிகதியிலிருந்து செயற்பாட்டு அறிக்கை ஒன்றினை குறித்த அரச அதிகாரியிடம் கோரினார். அவ் அறிக்கையிலே அவரது



விண்ணப்பத்தை குறித்த ஒழுங்கில் செயற்படுத்த தவறிய அதிகாரியின் பெயர், எவ்வகையான மற்றும் எப்போது அந்த அதிகாரியின் மீது குறித்த திணைக்களம் நடவடிக்கை எடுக்கும் மற்றும் எப்போது தனது ரேஷன் அட்டையை பெற முடியும் என்பவற்றை கோரியிருந்தார்.

தகவலிற்கான உரிமைக்கான விண்ணப்பத்தின் பின் அத்திணைக்களத்தின் உயர் அதிகாரி நண்ணுவின் ரேஷன் அட்டையை பெற்றுக்கொடுத்ததுடன் அவரை நல்ல முறையிலும் நடத்தினார்.

இறுதியில் அவர் தண்டனைகளிற்கு அஞ்சி நண்ணுவின் தகவலிற்கான கோரிக்கையை மீள பெறுமாறும் வேண்டிக் கொண்டார்.

பாடசாலைச் சிறுமியான கவிநயா தனது ஊரிற்கு ஏன் பஸ் சேவை வழங்கப்படவில்லை என சம்பந்தப்பட்ட அரச திணைக்களத்தில் வேண்டுகோள் விடுத்தாள். அவர்களது பதிலாக பஸ் சேவையானது இலாபமற்றதாக காணப்படுகின்றது என்பதே அமைந்தது. ஆனால் அந்த பஸ் சேவையானது இலாபம் தரக்கூடியது என பின்னர் தெரியவந்தது. அந்த சிறுமியின் கோரிக்கையின் பலனாக அந்த ஊரானது பஸ் சேவையினைப் பெற்றுக்கொண்டது.



TRANSPARENCY
INTERNATIONAL
SRI LANKA
a nation that upholds integrity

**ட்டிரான்ஸ்பேரன்ஷி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா**

கொழும்பு : 0114369781 | 0114369782 | 0114369783

மாத்தறை : 041 22 33 522

வவுனியா : 0242227676

**சர்வோதய சிரமதான சங்கம்**

அனுராதபுரம் : 0252222738

கொழும்பு : 0114365126

மாத்தறை : 0412222145

திருகோணமலை : 0262220083

இரத்தினபுரி : 0452231174